புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்
38, Main Road, Oulgreat,
Near KFC Moolakulam,
Puducherry-605009,
Cell: 97505 89992,9629620802

PRGI.NO.TNTAM/25/A1635 T/PN/2025/1216/7215/1419

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்
NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 | இதழ்: 231 | 25-02-2026 | புதன் | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி- புதுச்சேரி
Volume 01 | Issue: 231 | 25-02-2026 | Wednesday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy-Puducherry

## ‘கேரளம்’ ஆகிறது கேரளா: பெயர் மாற்றத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல்

புதுடெல்லி: பிப்.25–

கேரளாவின் பெயரை கேரளம் என மாற்ற மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.



கேரளாவின் பெயரை கேரளம் என மாற்ற மத்திய அரசு நடவடிக்கை எடுக்கக் கோரி கேரள சட்டப்பேரவையில் கடந்த 2024, ஜூன் 24 அன்று ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

தீர்மானத்தை முன்மொழிந்து பேசிய முதல்வர் பினராயி விஜயன், “இந்த மாநிலம் மலையாளத்தில் கேரளம் என்றே அழைக்கப் படுகிறது. மலையாளம் பேசும் மக்களுக்காக ஒன்றுபட்ட கேரளத்தை உருவாக்க வேண்டும் என்ற கோரிக்கை சுதந்திரப் போராட்ட காலத்தில் இருந்தே வலுவாக எழுந்துள்ளது. ஆனால், அரசியலமைப் பின் முதல் அட்டவணையில் மாநிலத்தின் பெயர் கேரளா என்றே எழுதப்பட்டது.

எனவே, அரசியலமைப்பின் 3வது பிரிவின் கீழ் கேரளம் என்று திருத்தம் செய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்கவும், அரசியலமைப்பின் 8வது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து மொழிகளிலும் கேரளா என்று உள்ளதை கேரளம் என மாற்றவும் மத்திய அரசை இந்த சட்டமன்றம் கேட்டுக்கொள்கிறது’’ என வலியுறுத்தினார்.

இந்த தீர்மானத்தின் மீது மத்திய அமைச்சரவை நேற்று ஆலோசனை மேற்கொண்டது. சமீபத்தில் திறக்கப்பட்ட புதிய பிரதமர் அலுவலக கட்டிடமான சேவா தீர்த்தத்தில் முதல் முறையாக மத்திய அமைச்சரவைக் கூடி இது குறித்து ஆலோசித்தது. முடிவில், மாநிலத்தின் பெயரை கேரளா என்பதில் இருந்து கேரளம் என மாற்ற மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

மத்திய அமைச் சரவையின் ஒப்புதலை அடுத்து, கேரளா (பெயர் மாற்றம்) மசோதா 2026ஐ, குடியரசு தலைவர், கேரள சட்டப் பேரவையின் ஒப்புதலுக்கு அனுப்பி வைப்பார். கேரள மாநில சட்டப் பேரவையின் ஒப்புதலை அடுத்து, பெயர் மாற்ற மசோதா நாடாளுமன்றத்தில் அறிமுகப் படுத்தப்படும். மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதை அடுத்து, அது குடியரசு தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பிவைக்கப் படும். குடியரசுத் தலைவரின் ஒப்புதலை அடுத்து பெயர் மாற்றம் நடைமுறைக்கு வரும்.

கேரளாவில் விரைவில் சட்டப் பேரவைத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில், மாநில பெயர் மாற்றம் முக்கிய நிகழ் வாகப் பார்க்கப்படுகிறது.

கடந்த 2023, ஆகஸ்ட்டில் இதே போன்ற ஒரு தீர்மானம் கேரள சட்டப் பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. அந்த தீர்மானத்தை ஆராய்ந்த மத்திய உள்துறை அமைச்சகம் அதில் சில தொழில்நுட்ப மாற்றங்களை பரிந்துரைத்தது. அதன் காரணமாக, 2024ல் கேரள சட்டப் பேரவையில் புதிதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## மு.க.ஸ்டாலின் ஆட்சியில் ஆதிதிராவிட பழங்குடியின மக்கள் முன்னேற்றம்: தமிழக அரசு பெருமிதம்

சென்னை: பிப்.25–

தமிழக அரசு வெளியிட்டு உள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது: முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் ஆதிதிராவிட பழங்குடியின இளைஞர்களின் கல்வி வளர்ச்சிக்காக அளித்து வரும் ஊக்கங்களால் ஆதிதிராவிடர் நலப்பள்ளிகளில் 12ம் வகுப்பு தேர்ச்சி விகிதம் 82 சதவீதம் என்பது 91.85 சதவீதமாகவும், பழங்குடியினர் நலப் பள்ளிகளில் தேர்ச்சி விகிதம் 84.55 சதவீதம் என்பது 95.5 சதவீதமாகவும் அதிகரித்துள்ளது .2024 2025ம் கல்வியாண்டில் ஐ.ஐ.டி., என்.ஐ.டி., என்.ஐ.எப்.டி. மற்றும் எப்.டி.டி.ஐ. போன்ற தேசியக்கல்வி நிறுவனங்களில் 16 பட்டியல் இன மாணவர்கள் இடம்பிடித்தனர். 2025 2026ம் கல்வியாண்டில் இந்த எண்ணிக்கை 135 மாணவர்கள் என உயர்ந்து மாபெரும் சாதனை நிகழ்த்தியுள்ளனர்.ஆதிதிராவிடர் பழங்குடியினர் பள்ளிகளில் ரூ.456.83 கோடி நிதி ஒதுக்கீட்டில் 868 வகுப்பறைகள் கட்டப்பட்டு கூடுதல் வசதிகளும் ஏற்படுத்தப் பட்டு உள்ளன.3ம் வகுப்பு முதல் முனைவர் பட்டம் வரை பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகையாக ரூ.6,604.17 கோடி வழங்கப்பட்டுள்ளது. அண்ணல் அம்பேத்கர் வெளிநாட்டு உயர்கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டத்தில், குடும்ப ஆண்டு வருமான வரம்பு ரூ. 3 லட்சம் என்பது ரூ.8 லட்சமாக உயர்த்தப்பட்டு ஒருவருக்கு அதிகபட்சமாக ரூ.36 லட்சம் வரை உதவித்தொகை அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் உதவி பெற்று முந்தைய ஆட்சியில் 10 ஆண்டுகளில் 6 மாணவர்கள் மட்டுமே வெளிநாடுகளில் பயின்றனர். திராவிட மாடல் ஆட்சியில் ரூ.75.54 கோடி உதவித் தொகை வழங்கப்பட்டு 440 மாணவர்கள் புகழ்பெற்ற ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் முதல் பல வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பயிலும் அருமையான வாய்ப்புகளைப் பெற்றுள்ளனர். முனைவர் பட்ட ஆராய்ச்சி ஊக்கத் தொகைத்திட்டத்தின்கீழ், ஆதிதிராவிட பழங்குடியினங்களைச் சேர்ந்த 8,886 ஆராய்ச்சி மாணவர்களுக்கு ரூ.88.86 கோடி ஊக்கத்தொகை வழங்கப் பட்டுள்ளது.செவிலியர் பட்டயப் படிப்பு உதவித் தொகை 184 பழங்குடியின மாணவிகளுக்கு ஆண்டுதோறும் ரூ.70,000 வீதம் 3 ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது .52,255 ஆதிதிராவிட பழங்குடியின மக்களுக்கு ரூ.409.68 கோடி மதிப்பிலான மானியத்துடன் கூடிய கடன்கள் வழங்கப்பட்டுத் தொழில் முகவர்களாக மேம் படுத்தப் பட்டுள்ளனர். முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அளித்து வரும் ஊக்கம் காரணமாக இந்தியாவிலேயே முதன்முதலாக தமிழ்நாட்டில் வாழும் ஆதிதிராவிட பழங்குடியினரில் 43 பேர் தொழில் முனைவர்களாக உயர்ந்து உள்ளனர். அவர்களுக்கு ரூ.60.80 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது. நன்னிலம் மகளிர் நில உடைமைத் திட்டத்தில் ரூ.49.35 கோடி மானியம் வழங்கப்பட்டு 1,042 மகளிர் நில உடைமையாளராக மாற்றப்பட்டனர்.வீடற்ற ஆதிதிராவிடர், பழங்குடியினமக்களுக்கு மொத்தம் 3,09,707 இலவச வீட்டுமனை இ பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆதிதிராவிடர் குடியிருப்புகளில், 8,535 உட்கட்டமைப்புப் பணிகள் ரூ.910 கோடி மதிப்பில் மேம்படுத் தப்பட்டுள்ளன. ரூ.117.27 கோடியில் 120 கிராம அறிவு மையங்களும், ரூ.40 கோடி யில் 52 அறிவுச் சுடர் மையங்கள் கட்டி முடிக்கப்பட் டுள்ளன. பண்டைய பழங்குடியினர் மற்றும் நரிக்குறவர் சமூகங் களுக்கு ரூ.315.44 கோடி செலவில் 7,255 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.பழங் குடியின மாணவர்கள் கற்பதற்குத் தேவையான சூழலை உருவாக்கும் வகையில் 117.27 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 120 கிராம அறிவுசார் மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. மேலும், 125.37 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 126 அறிவு மையங்கள் கட்டப் படுகின்றன. வன் கொடுமையால் பாதிக்கப் பட்ட ஆதிதிராவிட பழங்குடியினர் 22,244 பேர்களுக்கு ரூ.287.47 கோடி நிவாரண உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. 586 பேருக்குக் கருணை அடிப்படையில் வேலைகள் வழங்கப்பட்டுள்ளன. தூய்மைப் பணியாளர்களுக்கு 90 சதவீதம் அரசு மானியத்துடன் 1,000 வீடுகள் ரூ.110 கோடி செலவில் வழங்கப் பட்டன. மேலும், 30,000 வீடுகள் வழங்கப்படவுள்ளன. முதற்கட்டமாக 15.11.2025 அன்று 870 வீடுகள் வழங்கப்பட் டுள்ளன.மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சிகள் அனைத்திலும் பணியாற்றும் 1,29,689 தூய்மைப் பணியாளர்களுக்கு ரூ. 213.92 கோடி செலவில் மூன்று வேளையும் உணவு வழங்கும் மகத்தான திட்டத்தை நிறைவேற்றி தாயுமானவர் எனப் போற்றப்படுகிறார் நமது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அனைத்து வகையிலும் ஆதிதிராவிட பழங்குடியின சமூகங்களின் முன்னேற்றத்திற்காகச் செயல்படுத்தி வரும் திட்டங்களால் இந்திய அளவில் தமிழ்நாட்டின் ஆதிதிராவிட பழங்குடியின மக்கள் சிறப்பான முறையில் முன்னேற்றம் கண்டு வாழ்க்கையில் உயர்ந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.”,

## விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக செயற்குழு ஆலோசனை கூட்டம்

### விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ சிறப்புரை.

செஞ்சி, பிப். 25–



கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும், நகராட்சி, பேரூராட்சி, வார்டுகளிலும் ஏழை எளிய பொது மக்களுக்கு மார்ச் மாதம் முழுவதும் நலத்திட்ட உதவிகளையும் பள்ளி மாணவ மாணவிகளுக்கு கல்வி உபகரண பொருட்களையும் வழங்க வேண்டும் என விழுப்புரம் வடக்கு மாவட்ட செயற்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ சிறப்புரை.

விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக செயற்குழு ஆலோசனை கூட்டம் செஞ்சியில் நடைபெற்றது. கூட்டத்திற்குமாவட்ட அவைத் தலைவர் டாக்டர் ப. சேகர் தலைமை தாங்கினார். மாவட்ட துணை செயலாளர்கள் ரவிக்குமார், அருணகிரி, அமுதா ரவிக்குமார், மாவட்ட பொருளாளர் ரமணன், செயற்குழு உறுப்பினர்கள் நெடுஞ்செழியன், சீனிராஜ்ஆகியோர் முன்னிலை வகித்தனர். செயற்குழு உறுப்பினர் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் அனைவரையும் வரவேற்றார்.

கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர்செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

அப்போது கூட்டத்தில் கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சர் திராவிட தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் நகராட்சி பேரூராட்சிகளில் உள்ள அனைத்து வார்டுகளிலும் மார்ச் மாதம் முழுவதும்கழக இருவண்ண கொடியினை ஏற்றி வைத்து பொது மக்களுக்கு அறுசுவை உணவு வழங்கியும், பள்ளி மாணவ மாணவிகளுக்கு கல்வி உபகரண பொருட்களை வழங்கியும், ஆதரவற்றோர் முதியோர் இல்லத்தில் உள்ளவர்களுக்கு அறுசுவை உணவினை வழங்க வேண்டும் என்றும், முதலமைச்சரின் பிறந்தநாளில் அனைத்து பகுதிகளிலும் முதலமைச்சரின் அனைத்துசாதனைகளை விளம்பரப்படுத்திடவேண்டும் .

மார்ச் 9ஆம் தேதிகழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்களின் தலைமையில் திருச்சியில் நடைபெறும் திமுக மாநாட்டில் விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுகசார்பில் அனைத்து ஒன்றிய நகர பேரூர் கழகங்களின் சார்பாகவாகனங்கள் மூலம் பெருமளவில் திமுகவினர்கலந்து கொள்வது எனவும்,

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சரின் வேண்டுகோளின் படி விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் செஞ்சி மயிலம் திண்டிவனம் ஆகிய மூன்று சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட அனைத்து ஒன்றியம் நகர பேரூர் ஊராட்சி கிளைக் கழகங்களில்பிப்ரவரி 23 முதல் மார்ச் 8ஆம்தேதி வரை வெல்லும் தமிழ் பெண்கள் ஸ்டாலின் படை பரப்புரையை சிறப்பாக நடத்துவது எனவும்,

இந்திய தேர்தல் ஆணையம் பிப்ரவரி 23ஆம் தேதி வரை வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது இதில் விடுபட்ட வாக்காளர்களை சேர்த்திடும் வகையில் கழக நிர்வாகிகள் தோழர்கள் முன்னின்று செயல்படுத்துவது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேதுநாதன், செந்தமிழ் செல்வன், தலைமை தீர்மானக்குழு உறுப்பினர் செஞ்சி சிவா, பொதுக்குழு உறுப்பினர்கள் கதிரேசன், மணிவண்ணன், வீடூர் ரவி,சாந்தி ஏழுமலை, ஒன்றிய செயலாளர்கள் சொக்கலிங்கம்,ராஜாராமன், அண்ணாதுரை, மொடையூர் துரை, இளம்வழுதி,மணிமாறன், செழியன், விஜயராகவன், பச்சையப்பன், தயாளன், பழனி, ரவிச்சந்திரன், சாந்தி சுப்பிரமணியன்,நாராயணமூர்த்தி,திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன், அனந்தபுரம் நகர செயலாளர் சம்பத்,திண்டிவனம் நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான்,செஞ்சி ஒன்றிய துணைச் சேர்மன் ஜெயபாலன், அணிஅமைப் பாளர்கள்ஆனந்த், கோபிநாத் ,பிரசன்னா, திலகவதி, ராஜசக்தி, கே அன்சாரி ,திருமலை, ஜி. ரவிச்சந்திரன், டாக்டர் சக்தி பிரியன், எஸ். விஜயராகவன், சிவகாமி, ரோமியன் உள்ளிட்ட மாநில மாவட்ட ஒன்றியநகர பேரூராட்சி கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.செஞ்சி நகர செயலாளர் கார்த்திக் நன்றி கூறினார்.

## ஜெயலலிதா கட்டளையை ஏற்று முதலமைச்சராக பொறுப்பேற்றேன் : ஓ.பன்னீர்செல்வம் பேட்டி”,

தேனி, பிப். 25–

“தேனி மாவட்டம் போடியில் முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:* ஜெயலலிதா கட்டளையை ஏற்று முதலமைச்சராக பொறுப்பேற்றேன்.* 6 மாத கால முதலமைச்சராகஇருந்த நான் ஜெயலலிதா கேட்டதும் பதவியை ஒப்படைத்தேன்.* ஜெயலலிதா இல்லாதபோது நான் முதலமைச்சராக இருக்க விரும்பவில்லை.*



என்னை கட்டாயப்படுத்தி தான் முதலமைச்சராக அமர வைத்தனர்.* 3வது முறையாக கட்டாயத்தின் அடிப்படையில்தான் முதலமைச்சராக பொறுப்பேற்றேன்.* முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா மறைவுக்கு பிறகு அ.தி.மு.க. பல்வேறு சோதனைகளை சந்தித்து வருகிறது.* அனைவரும் ஒற்றுமையுடன் இருந்தால் மட்டுமே சோதனைகளை எதிர்கொள்ள முடியும் என வலியுறுத்தி வந்தேன். இவ்வாறு அவர் கூறினார்.”,



விழுப்புரம் மாவட்டம். மேல்மலையனூர் ஒன்றியம் வடக்கு சார்பில் ஒன்றிய கழக செயலாளர் அண்ணன் புண்ணியமூர்த்தி அவர்கள் மேல்மலையனூர் பேருந்து நிலையம் எம்ஜிஆர் திடலில் புரட்சித்தலைவி தங்கத் தாரகை அம்மா அவர்களின் 78வது பிறந்தநாள் விழா மலர் தூவிபொதுமக்களுக்கு இனிப்பு வழங்கியும் மேலும் பெரிய தெருவில் மாவட்ட எம் ஜி ஆர் இளைஞர் அணி சார்பில் அமைக்கப்பட்ட அம்மா அவர்களின் திருஉருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செய்தனர் பொது மக்களுக்கு அன்னதான வழங்கப்பட்டது இதில் கழக நிர்வாகிகள் கழகத் தொண்டர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

# திருவள்ளூரில் மறைந்த முன்னாள் முதல்வர் புரட்சித்தலைவி அம்மாவின் 78ஆவது பிறந்தநாளை முன்னிட்டு முன்னாள் அமைச்சர் பி.வி.ரமணா ஏற்பாட்டில் தொடர் அன்னதானம்



திருவள்ளூர் பிப் 25 :

மறைந்த முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மாவின் 78 வது பிறந்தநாளை முன்னிட்டு தமிழகம் முழுவதும் அதிமுகவினர் உற்சாகமாக கொண்டாடி வருகின்றனர். அதன்படி முன்னாள் அமைச்சரும், திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளருமான பி வி ரமணா ஏற்பாட்டில் திருவள்ளூர் ஸ்ரீ வைத்திய வீரராகவர் கோவில் அருகில் காலை 8 மணி முதல் இரவு 8 வரை தொடர் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சியை அன்னதானம் வழங்கி தொடங்கி வைத்தார்.

காலையில் இட்லி, பொங்கல் வடை, சட்னி சாம்பாரும் அதனைத் தொடர்ந்து மிளகு சாதம், தக்காளி சாதம், பிரிஞ்சி என தொடர்ந்து வழங்கப்பட உள்ளதாக முன்னாள் அமைச்சர் பி.வி.ரமணா தெரிவித்தார். அதேபோல் அண்ணா தொழிற்சங்கம் சார்பில் மண்டல செயலாளர் ராமலிங்கம் மற்றும் டிப்போ தலைவர் கமலநாதன், செயலாளர் சண்முகம் ஏற்பாட்டில் பஸ் டிப்போ வளாகத்தில் அன்னதானத்தை முன்னாள் அமைச்சர் பி.வி.ரமணா வழங்கினார்.

அதே போல் மணவாள நகரில் மாநில எம்ஜிஆர் இளைஞர் அணி துணை செயலாளர் எஸ்.ஞானகுமார் ஏற்பாட்டில் புரட்சித் தலைவி அம்மாவின் பிறந்தநாளை பொது மக்கள், வாகன ஓட்டிகள், பேருந்துகளில் பயணம் செய்தவர்களுக்கு இனிப்பு வழங்கி உற்சாகமாக கொண்டாடி மகிழ்ந்தனர்.

இதில் மாவட்ட துணை செயலாளர் எல்.செந்தில்குமார், மாவட்ட அம்மா பேரவை செயலாளர் கேபிஎம்.எழிலரசன், மாநில பொதுக்குழு உறுப்பினர் எஸ்.ஏ.நேசன், மாவட்ட இளைஞர் அணி தலைவர் புங்கத்தூர் டி.தேவா, கடம்பத்தூர் ஒன்றிய செயலாளர் எஸ்.சுதாகர், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் சத்தியமூர்த்தி, வழக்கறிஞர் பிரிவு சந்திரசேகர், மாவட்ட அம்மா பேரவை இணை செயலாளர் ஜெயா நகர் குமரேசன், நகர செயலாளர் ஜி.கந்தசாமி, ஒன்றிய அம்மா பேரவை செயலாளர் ஜி.உமாபதி, அம்மா பேரவை நகர செயலாளர் ஜோதி, முன்னாள் கவுன்சிலர் துக்காராம் உட்பட அதிமுக நிர்வாகிகள் கலந்து கொண்டு புரட்சித் தலைவி அம்மாவின் பிறந்த நாளை இனிப்பு வழங்கியும், அன்னதானம் வழங்கியும் கொண்டாடினர்.

## விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடையை எதிர்த்து வைகோ தொடர்ந்த வழக்கு தள்ளுபடி செய்தது ஐகோர்ட்!!

சென்னை: பிப்.25–

விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடையை எதிர்த்து மதிமுக பொதுச்செயலாளர் வைகோ தொடர்ந்த வழக்கை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. 2014ம் ஆண்டு மதிமுக பொதுச்செயலாளர் வைகோ தாக்கல் செய்த மனுவை உயர்நிதிமன்றம் தள்ளுபடி செய்தது. 2024 தடை உத்தரவு அமலில் உள்ளதால் வழக்கு செல்லத்தக்கது அல்ல என்று கூறி மனுவை ஐகோர்ட் தள்ளுபடி செய்தது .

# மத்தூரில் அமமுக சார்பில் ஜெயலலிதா அவர்களின் 78வது பிறந்தநாள் விழா கொண்டாட்டம்



கிருஷ்ணகிரி, பிப்.25–

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி தாலுக்கா மத்தூரில், அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் சார்பில் தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்களின் 78வது பிறந்தநாள் விழா சிறப்பாகக் கொண்டாடப் பட்டது.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் சா. கணேஷ் குமார் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மேற்கு ஒன்றிய செயலாளர் க.மோகன் தலைமையில் இந்த விழா நடைபெற்றது.மறைந்த முதல்வர் ஜெயலலிதா அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தப் பட்டது. இனிப்பு வழங்கும் விழாவின் ஒரு பகுதியாக பொது மக்களுக்கு இனிப்பு வழங்கி கொண்டாடப் பட்டது. பங்கேற்ற நிர்வாகிகள்: இந்த நிகழ்வில் கட்சியின் முக்கியப் பொறுப்பாளர்கள் பலர் கலந்துகொண்டனர்: செந்தில் தெற்கு ஒன்றிய செயலாளர் முருகன் ஓட்டுநர் அணி அம்மா ரவி அம்மா பேரவை ஒன்றிய செயலாளர். பாலையா மாவட்ட எம்ஜிஆர் மன்ற துணைச் செயலாளர். சிவாஜி ஒன்றிய துணை செயலாளர். ஆனந்தன் பொதுக்குழு உறுப்பினர். மேலும் தண்டபாணி, செல்வம், மாதேஷ், சுப்பிரமணி, சையத் பாஷா, மாரியப்பன், நாகராஜ், சகாதேவன், பெருமாள் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் கழந்துக்கொண்டனர்.



சேலம் மாவட்டம் அயோத்தியபட்டினம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன் ஏற்காடு தொகுதி மக்கள் கோரிக்கையை வலியுறுத்தி C.கோபி ASM தேசிய கவுன்சில் உறுப்பினர் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது A.சந்திரமோகன் AIKM மாநில பொதுச் செயலாளர்.V.அய்யாத்துரை AIKM மாவட்டச் செயலாளர் D.கதிரவன் ST பேரவை செயலாளர் R. வேல்முருகன் CPIML மாவட்ட செயலாளர் A.ராகுல் AISA மாநில அமைப்பாளர் N. குபேந்திரன் CPIML மாவட்ட குழு k.முருகன் ஆச்சங்குட்டப்பட்டி ஆகியோர் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துறைகளை வழங்கினார்கள். .இதில் முதன்மையான கோரிக்கையாக ஏற்காடு தொகுதி மக்கள் நீண்ட காலமாக விவசாயம் செய்து வரும் நிலங்களுக்கும் வீடு கட்டி குடியிருக்க கூடிய வீட்டுமனைக்கும் பட்டா வழங்க வேண்டும் என கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது இதில் ஏற்காடு தொகுதிக்கு உட்பட்ட 200க்கும் மேற்பட்ட பழங்குடி மக்கள் மற்றும் விவசாயிகள் அனைவரும் கலந்து கொண்டு கூட்டத்தை சிறபித்தார்கள் V.ராஜ்குமார் ASM தோழர் நன்றியுரை வழங்கினார் கூட்டத்திற்கு வருகை தந்த அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொண்டார்கள்.

## திருவிடைமருதூர் தொகுதிக்கான காங்கிரஸ் வேட்பாளராக எம் மாரியப்பனை ஆதரவாளர்கள் தேர்வு செய்ய கோரிக்கை வைத்தனர்:

இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் தேசிய தலைவர் மல்லிகார் ஜூன் கார்கோ நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி மற்றும் மூத்த தலைவர் சோனியா காந்தி ஆகியோரின் தலைமையில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் மாநிலத் தலைவர் செல்வப் பெருந்தகை வழிகாட்டுதலின் பேரில் எஸ்சி எஸ்டி பிரிவு மாநில துணைத்தலைவராக உள்ளையும் மாரியப்பன் திருவிடைமருதூர் சட்டமன்ற தொகுதிக்கான காங்கிரஸ் வேட்பாளராக விருப்பம் மனு தாக்கல்



முன்னாள் தஞ்சை வடக்கு மாவட்ட தலைவர் டி ஆர் லோகநாதனிடம் விருப்பமான தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் தற்போது தஞ்சை வடக்கு மாவட்ட புதிய தலைவராக குமரன் நியமிக்கப்பட்டுள்ளார். எம். மாரியப்பன் மத்திய அரசை கண்டித்து நடைபெறும் பல்வேறு ஆர்ப்பாட்டங்கள் மற்றும் போராட்டங்களில் தொடர்ந்து பங்கேற்று வருவதுடன் திருவிடைமருதூர் சட்டமன்ற தொகுதியில் கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக முழுநேர அரசியல் மற்றும் சமூகப் பணிகளில் ஈடுபட்டு வருகிறார். இதனை கருத்தில் கொண்டு திருவிடைமருதூர் சட்டமன்ற தொகுதிக்கான காங்கிரஸ் வேட்பாளராக எம். மாரியப்பன் தேர்வு செய்ய வேண்டும். என அவரது ஆதரவாளர்களும் பொதுமக்களும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியிடம் வலியுறுத்தி வருகின்றனர்.

## விழுப்புரம் வடமேற்கு மாவட்ட த.வெ.க செயலாளர் வழக்கறிஞர் குண.சரவணன் அறிக்கை.

விழுப்புரம் வடமேற்கு மாவட்ட தமிழக வெற்றிக் கழகத்தின் செயல் வீரர் கூட்டம்.



விழுப்புரம் வடமேற்கு மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் செஞ்சி குண. சரவணன். அவர்களின் அறிக்கை

வருகின்ற 01.03. 2026 ம் தேதி நமது மாவட்ட கழகத்தின் சார்பில் செயல் வீரர் கூட்டம் செஞ்சி திருவண்ணாமலை சாலையில் உள்ள வள்ளி அண்ணாமலை திருமண மண்டபத்தில் காலை 10 மணி அளவில் நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு மாவட்ட நிர்வாகங்கள், பொதுக்குழு செயற்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதி, நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பு:

1.தேர்தல் சம்பந்தமாக

2. கழக வாக்கு பணிகள் குறித்து.

## கிராம உதவியாளர்கள் செஞ்சியில் சாலை மறியல், 75 பேர் கைது



தமிழ்நாடு முழுவதும் கிராம உதவியாளர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்க கோரி கருப்பு பட்டை அணிந்து மாநிலம் தழுவிய மறியல் போராட்டம் நடைபெற்றது.

அதன் ஒரு பகுதியாக விழுப்புரம் மாவட்டம் செஞ்சி வட்டாட்சியர் அலுவலகம் முன்பு போராட்டம் நடந்தது.

பின்னர் திடீரென செஞ்சிரு திண்டிவனம் சாலையில் மறியல் செய்ததால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

இதையடுத்து செஞ்சி காவல் ஆய்வாளர் அண்ணாதுரை தலைமையில் 75 க்கு மேற்பட்ட கிராம உதவியாளர்கள் கைது செய்யப்பட்டு தனியார் மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

# முன்னாள் முதல்வர் ஜெயலலிதா பிறந்த நாள் விழா ஸ்தம்பித்தது காவேரிப்பட்டணம் நகரம்



கிருஷ்ணகிரி, பிப்.25–

இதய தெய்வம்_அம்மா அவர்களின் 78வது பிறந்த நாளான நேற்று , மக்களால், மக்களுக்காகவே என்று வாழ்ந்த நம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பிறந்தநாள் விழா காவேரிப் பட்டணம் ஒன்றியம் மற்றும் நகர கழகம் சார்பாக ஊர்வலம் சென்று காவேரிப் பட்டணம் பேருந்து நிலையம் அருகே அம்மா அவர்களின் திருவுருவ படத்திற்கு மலர்தூவி மரியாதை செய்து கொண்டாடப்பட்டது . இந்நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி மாவட்ட கழக செயலாளர் மற்றும் கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர் கே அசோக் குமார் MLA இளைஞர் மற்றும் இளம்பெண்கள் பாசறை மாவட்ட செயலாளர் KPM சதீஷ்குமார் அவர்கள் கலந்து கொண்டு சுமார் 1000 க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு பிரியாணி வழங்கினார்கள்

காவேரிப்பட்டணம் மேற்கு ஒன்றிய செயலாளர் மற்றும் முன்னாள் ஒன்றிய குழு தலைவர் பையூர் ரவி அவர்கள் காவேரிப் பட்டிணம் நகர கழக செயலாளர் விமல் மற்றும் இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஒன்றிய நகர கழக நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்...

**தலைக்கவசம் அணியாமல் இரு சக்கர வாகனம் ஓட்டாதீர்கள்....**

# முன்னாள் முதல்வர் ஜெயலலிதா பிறந்த நாள் விழா



கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள காவேரிப்பட்டிணம் அருகே உள்ள சாப்பர்த்தி பஞ்சாயத்து மோரன அள்ளி கிராமத்தில் எம் ஜி ஆர் சிலை முன்பு மறைந்த தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்களின் 78வது பிறந்த நாளை முன்னிட்டு மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்கள் திரு உருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கிய அதிமுக கட்சியின் தொண்டர்கள்.



வேலூர் மாவட்டம் அணைக்கட்டு தொகுதி கீழ் மொணவூர் ஊராட்சி மதுரா ஆவாரம்பாளையம் கிராமத்தில் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 78 வது பிறந்தநாளை கிராம மக்கள் அதிமுக தொண்டர்கள் இனிப்புகள் வழங்கி வெகு சிறப்பாக கொண்டாடினர் மாலை பொது மக்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகின்றன




விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் தாலுகா ஞானோதயம் ஜோசப் மென்யூ மாணவர் விடுதியில் செஞ்சி செக்கோவர் தொண்டு நிறுவனத்தின் நிறுவனர் சூசை ராஜ் பிறந்த தினம் முன்னிட்டு பில்லர்ஸ் டே கொண்டாடப்பட்டது இதில் ஞானோதயம் ஜோசப் மென்யூ மாணவர் விடுதிக்கு செக்கோவர் நிறுவன இயக்குனர் அம்பிகா சூசைராஜ் தண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரம் வழங்கினார் . இதில் ஜோசப் மென்யூ பாய்ஸ் ஹாஸ்டல் ரெவெரென்ட் சுரேஷ்குமார் விடுதி மேனேஜர் பவுல் ரத்தின கருணாகரன் வார்டன் ராபர்ட் மற்றும் செக்கோவர் தொண்டு நிறுவன அலுவலர்கள் ராஜாராம் அரவிந்த் அரசு டேனியல் குலசேகர் சக்திவேல் சிவா சங்கீதா சுரேஷ் பாபு சூர்யா கவியரசன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# வில்லியனூர் தேர்தல் களம் அதிரடி: களமிறங்கும் சமூகச் சேவகர் வழக்கறிஞர் சாகுல் அமீது!



வில்லியனூர் | பிப் 25

புதுச்சேரி மாநிலத்தின் அரசியல் களம் தற்போதே சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது. குறிப்பாக, வில்லியனூர் சட்டமன்றத் தொகுதியில் அகில இந்திய மஜ்லிஸ் (AIMIM) கட்சியின் சார்பில், பிரபல வழக்கறிஞரும் சமூகச் சேவகருமான சாகுல் அமீது போட்டியிட உள்ளதாக வெளியாகி இருக்கும் அறிவிப்பு, அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக வில்லியனூர் மக்களின் இன்ப துன்பங்களில் பங்கெடுத்து வரும் சாகுல் அமீது, வெறும் அரசியல் முகமாக மட்டுமல்லாமல், ஒரு சிறந்த மக்கள் சேவகராகப் பார்க்கப்படுகிறார். 'அல் இந்தியா சாரிட்டபிள் டிரஸ்ட்' (Al India Charitable Trust) மூலம் அவர் ஆற்றி வரும் பணிகள் மக்கள் மத்தியில் பலத்த வரவேற்பைப் பெற்றுள்ளன.

விளையாட்டுத் துறையில் ஆர்வம் கொண்ட இளைஞர்களுக்கு வாலிபால் நெட், சீருடைகள் மற்றும் விளையாட்டு உபகரணங்களை வழங்கி ஊக்கப்படுத்தி வருகிறார். ஏழை மாணவர்களின் கல்விச் செலவுகள் மற்றும் உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் முன்னின்று செயல்படுகிறார். ஒரு வழக்கறிஞராக ஏழை எளிய மக்களுக்குக் கட்டணமில்லா சட்ட ஆலோசனைகளை வழங்குவதோடு, தொடர்ச்சியாக மருத்துவ முகாம்களையும் ஒருங்கிணைத்து வருகிறார்.

"பதவி என்பது அதிகாரத்திற்காக அல்ல, அது அடிமட்ட மக்களுக்குச் சேவை செய்வதற்கான ஒரு கருவி" வழக்கறிஞர் சாகுல் அமீது. தற்போது AIMIM கட்சியின் மாநிலச் செயலாளராகப் பொறுப்பு வகித்து வரும் சாகுல் அமீது, கட்சித் தலைமையின் முழு ஆதரவுடன் களம் காண்கிறார். நீண்டகாலமாக மக்கள் பணியில் ஈடுபட்டு வருவதால், இவருக்குத் தொகுதியில் உள்ள இளைஞர்கள் மற்றும் சாமானிய மக்களின் ஆதரவு அதிகரித்துள்ளது. இது மற்ற பிரதான கட்சிகளின் வேட்பாளர்களுக்கு ஒரு சவாலாக அமையும் என அரசியல் நிபுணர்கள் கருதுகின்றனர்.

வில்லியனூர் தொகுதியில் ஒரு 'மக்கள் சேவகர்' அரசியல்வாதியாக அவதாரம் எடுப்பது, வரவிருக்கும் தேர்தலில் ஒரு மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# உழவர்கரையில் மக்கள் வெள்ளத்தில் மிதந்த "மக்கள் சேவகி" லாவண்யாவின் பிறந்தநாள் விழா!




புதுச்சேரி: பிப்.25–

உழவர்கரை தொகுதியின் முக்கிய ஆளுமையாகவும், சமூக ஆர்வலருமான முனைவர் மூ. லாவண்யா அவர்களின் பிறந்தநாள் விழா, இன்று ஒரு அரசியல் விழாவாக மட்டுமன்றி, ஒட்டுமொத்த தொகுதியே கொண்டாடும் மக்கள் திருவிழாவாக எழுச்சியுடன் நடைபெற்றது. கடந்த 8 ஆண்டுகளாக அவர் ஆற்றி வரும் இடைவிடாத மக்கள் சேவைக்கு அங்கீகாரம் அளிக்கும் வகையில் ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு வாழ்த்து மழை பொழிந்தனர்.

விழாவின் தொடக்கமாக பிச்சைவீரம்பேட்டையில் பேண்ட் வாத்தியங்கள் மற்றும் வானவேடிக்கைகள் முழங்க, லாவண்யா அவர்கள் புரட்சியாளர் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அதனைத் தொடர்ந்து அங்கு திரண்டிருந்த 500க்கும் மேற்பட்ட மக்களுடன் இணைந்து கேக் வெட்டி மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டார். மேலும், அப்பகுதி மக்களுக்குப் பிரம்மாண்டமான அன்னதானம் வழங்கப்பட்டது.

தக்கக்குட்டை மற்றும் மேரி உழவர்கரை பகுதிகளில் நடைபெற்ற விழாக்களில் மனிதாபிமானம் மேலோங்கி நின்றது:

ஏழை எளிய மக்களுக்குப் பால், ரொட்டி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டன.

ட்ரம்ஸ் வாத்தியங்கள் முழங்க உற்சாகமாக வரவேற்கப்பட்ட லாவண்யா அவர்கள், அங்குள்ள பெண்களுக்குப் புடவைகள் மற்றும் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

புதுநகர் பகுதியில் நடந்த நிகழ்வு அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது. அங்குள்ள கோயிலில் சிறப்பு வழிபாடுகள் நடத்தப்பட்ட பிறகு, மக்கள் அவருக்கு "கிரீடம்" சூட்டி, பிரம்மாண்ட மாலை அணிவித்து கௌரவித்தனர். ஒரு அரசியல் தலைவராக மட்டுமன்றி, தங்களில் ஒருவராகப் பார்க்கும் அன்பின் வெளிப்பாடாக இது அமைந்தது.

ஜே.ஜே நகர் மற்றும் பாவாணர் நகர் பகுதிகளில் நூற்றுக்கணக்கானோருக்கு வயிறார உணவு வழங்கப்பட்டது. "வாழ்க லாவண்யா அம்மா" என்ற முழக்கங்கள் தொகுதி முழுவதும் எதிரொலித்தன.

உழவர்கரை தொகுதியில் இதுவரை இல்லாத வகையில் ஒரு தனிநபரின் பிறந்தநாளுக்கு மக்கள் காட்டிய இந்த ஆதரவு, அரசியல் வட்டாரங்களில் உன்னிப்பாகக் கவனிக்கப்படுகிறது. கடந்த 8 கால மக்கள் பணியின் அறுவடையாகவே இந்த எழுச்சி பார்க்கப்படுகிறது. மக்களின் இந்த அதீத அன்பு, வரும் தேர்தலில் ஒரு மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதற்கான முன்னோட்டமாகவே இன்றைய நிகழ்வுகள் அமைந்துள்ளதாக அரசியல் பார்வையாளர்கள் கருதுகின்றனர்.

# புதுச்சேரி முத்தியால்பேட்டையில் தி.மு.க பிரபாகரன் தலைமையில் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்குச் சுழல் நிதி வழங்கும் விழா!



புதுச்சேரி: பிப்.25–

புதுச்சேரி முத்தியால்பேட்டை சட்டமன்றத் தொகுதியில், மகளிர் முன்னேற்றத்தை ஊக்குவிக்கும் வகையில் தி.மு.க தலைமை பொதுக்குழு உறுப்பினர் மு. பிரபாகரன் அவர்களின் ஏற்பாட்டில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குச் சுழல் நிதி வழங்கும் தொடக்க விழா நடைபெற்றது. முத்தியால்பேட்டை தொகுதியில் பதிவு செய்யப்பட்டுள்ள 45 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்குச் சுழல் நிதி வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் முதற்கட்டமாக, நடைபெற்ற விழாவில் 10 குழுக்களுக்குச் சுழல் நிதியினை மு. பிரபாகரன் அவர்கள் வழங்கினார்.

"என்றும் மக்கள் பணியில்" என்ற நோக்கத்தோடு, பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் இந்த உதவி வழங்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் திரளான மகளிர் குழு உறுப்பினர்கள் மற்றும் தொகுதி பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# இருசக்கர வாகனம் கட்டுப்பாட்டை இழந்து சாலையோர மின்கம்பத்தில் மோதிய விபத்தில் 11ம் வகுப்பு மாணவன் சாவு: மற்றொருவர் காயம்

திருச்சி பிப்.25

திருச்சி ,மலைக்கோட்டை நடு தையல்கார தெருவை சேர்ந்தவர் நாகராஜ் (54)காண்ட்ராக்டர். இவரது மகன் அருண் ( 17). 11ம் வகுப்பு படித்து வந்தார்.பீமநகர் பகுதியை சேர்ந்த முகமது யாசிம் (16). நண்பர்கள் ஆன (24 ந்தேதி) காலை டூவிலரில்

கோர்ட்டு பின்புறம் அண்ணாநகரில் இருந்து எம்.ஜி.ஆர் சிலை சாலை நோக்கி வந்து கொண்டிருந்தனர். அப்போது அவர்கள் கட்டுப்பாட்டை இழந்து சாலையோரம் இருந்த மின்கம்பத்தில் மோதினர். இதில் பலத்த காயமடைந்தனர். இதை கண்ட அருகில் உள்ளவர்கள் மீட்டு ஆம்புலன்ஸ் மூலம் திருச்சியில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். அங்கு சிகிச்சை பலனின்றி அருண் பரிதாபமாக உயிரிழந்தார். முகமது யாசிம் அங்கு சிகிச்சையில் உள்ளார். இதுகுறித்து திருச்சி தெற்கு போக்குவரத்து புலனாய்வு பிரிவு போலீசார் வழக்குபதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# புதுச்சேரி மாற்றுக்கட்சியினர் திமுகவில் இணைந்தனர்!



கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் அவர்கள் முன்னிலையில் புதுச்சேரி மங்கலம் தொகுதியை சேர்ந்த ரங்கன் அவர்களும் அவரது மகள் பிரியா, ஜே.கே. ராதாகிருஷ்ணன் மற்றும் முன்னாள் அரசு அதிகாரி யஸ்வந்தய்யா உள்ளிட்டோர் சென்னையில் உள்ள முதல்வர் முகாம் அலுவலகத்தில் தங்களை திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக்கொண்டனர். அருகில் புதுச்சேரி மாநில திமுக அமைப்பாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா அவர்கள் உள்ளார்.

# கல்லூரியில் தேர்வு முறைகேடு : ABVP போராட்டம்




புதுவை சமுதாயக் கல்லூரியில் நடந்த தேர்வில் முறைகேடு நடத்திய திருமதி. கயா மற்றும் அதற்கு உறுதுணையாக இருந்த பேராசிரியர். லலிதா ராமகிருஷ்ணனை உடனடியாக பதவி நீக்க கூறி கிங்ஷிறி அமைப்பினர் பல்கலைக்கழக தேர்வு ஆணையத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தி வருகின்றனர் .

முன்னாள் தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் 78ஆம் ஆண்டு பிறந்தநாள் விழா,

# அதிமுக தொண்டர்கள் உரிமை மீட்பு கழகம் சார்பில் மிகுந்த சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.



புதுச்சேரி, பிப். 25–

புதுவை எல்லை பிள்ளை சாவடி சாலையில் அமைந்துள்ள அம்மா அவர்களின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. தொடர்ந்து சிலை அடியில் வைக்கப்பட்டிருந்த அம்மா அவர்களின் உருவப்படத்திற்கு ஓம்சக்தி சேகர் அவர்கள் மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். பின்னர் கழக நிர்வாகிகள், அணி பொறுப்பாளர்கள் மற்றும் பொதுமக்கள் அஞ்சலி செலுத்தினர். நிகழ்ச்சியில் பொது மக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

மேலும் லெனின் வீதி கழக அலுவலகத்தில் நடைபெற்ற பிறந்தநாள் விழா நிகழ்ச்சியில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அம்மா அவர்களின் உருவப்படத்திற்கு திரு. ஓம்சக்தி சேகர் அவர்கள் மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். தொடர்ந்து கழகக் கொடி ஏற்றப்பட்டு, பட்டாசு வெடித்து, இனிப்பு வழங்கப்பட்டது. மாநில கழக நிர்வாகிகள், அணி செயலாளர்கள், பொதுக்குழு மற்றும் செயற்குழு உறுப்பினர்கள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

# ஏழை மக்கள் கழகம் நிறுவனர் தலைவர் பூக்கடை கமலக்கண்ணன் அவர்கள் தலைமையிலும் மாநில மகளிர் அணி நிர்வாகிகள் முன்னிலையில் பதவி வழங்கும் விழா



புதுச்சேரி, பிப்.25–

புதுச்சேரியில் பெரும் பரபரப்பு 23.2.2026 அன்று ஏழை மக்கள் கழகம் புதுச்சேரி இந்திரா நகர் தொகுதி மகளிர் அணித் தலைவியாக லட்சுமி அவர்களுக்கு பதவி வழங்கி கழக பணியும் மக்கள் சேவையும் மேலும் தொடரட்டும் என்று அனைவரும் வாழ்த்துக்கள் தெறிவித்தனர் இந்த விழாவில் ஏழை மக்கள் கழகம் நிறுவனர் தலைவர் பூக்கடை கமலக்கண்ணன் அவர்கள் மாநில கழக பொருளாளர் ரமேஷ் அவர்கள் மாநில கழக அமைப்பாளர் கருணாகரன் அவர்கள் மாநில கழக துணை தலைவர் அண்ணாமலை அவர்கள் மாநில கழக அமைப்புச் செயலாளர் முருகன் அவர்கள் மாநில மகளிர் அணித் தலைவி திருமதி அருணா மாநில மகளிர் அணிச் செயலாளர் புவனேஸ்வரி மாநில மகளிர் அணித் துணை தலைவி திருமதி சரிதா மற்றும் சமூக சேவகி பூரணி ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்தினார் கள் ஏழை மக்கள் கழகம் நிறுவனர் தலைவர் பூக்கடை கமலக்கண்ணன் அவர்கள் கூறும்போது கழக நிர்வாகிகளை தினமும் இனைத்து பதவி வழங்கி மக்கள் நலத்திட்ட சேவைகளை செய்து வருகின்றோம் எங்களுடன் அனைவரும் ஒரு குடும்பமான இனைத்து மக்கள் சேவை செய்ய அன்போடு அழைக்கின்றோம்.

# திருவள்ளூர் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடம் இருந்து 668 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டன



திருவள்ளூர் பிப் 25 :

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தலைமை தாங்கினார்.

கூட்டத்தில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வருகை புரிந்த பொதுமக்கள், தங்களது குறைகளை நிவர்த்தி செய்வது தொடர்பாகவும் பொது பிரச்சனைகள் தொடர்பாக உதவிகள் வேண்டியும் 668 மனுக்களை மாவட்ட ஆட்சியரிடம் வழங்கினர். இதில், நிலம் சம்பந்தமாக 76 மனுக்களும், கலைஞர் மகளிர் உரிமை தொகை சம்பந்தமாக 180 மனுக்களும், சமூக பாதுகாப்பு திட்டம் தொடர்பாக 42 மனுக்களும், வேலைவாய்ப்பு வேண்டி 42 மனுக்களும், பசுமை வீடு, அடிப்படை வசதிகள் வேண்டி 28 மனுக்களும், மற்றும் இதர துறைகள் சார்பாக 300 மனுக்கள் என ஆக மொத்தம் 668 மனுக்கள் பெறப்பட்டன. இம்மனுக்களின் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு தகுதியுள்ள பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கிட சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் மு. பிரதாப் அறிவுறுத்தினார்.

இதில் மாவட்ட வருவாய் அலுவலர் ச.சுரேஷ், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) வெங்கட்ராமன், தனித்துணை ஆட்சியர் பாலமுருகன், மாவட்ட வழங்கல் அலுவலர் வெங்கடேசன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் உஷா ராணி, மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் குமார், துணை ஆட்சியர் பயிற்சி) செ.சண்முக பிரீத்தா மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கிருஷ்ணகிரி மாவட்டம், மத்தூரில் நடைபெற்ற முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்களின் 78வது பிறந்தநாள் விழா



கிருஷ்ணகிரி, பிப்.25–

மத்தூரில் ஜெயலலிதா அவர்களின் 78வது பிறந்தநாள் விழா எழுச்சியுடன் கொண்டாட்டம் கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி தாலுக்கா மத்தூர் ஒன்றியத்தில், மறைந்த தமிழக முன்னாள் முதல்வர் புரட்சித்தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்களின் 78வது பிறந்தநாள் விழா அதிமுக சார்பில் உற்சாகமாகக் கொண்டாடப்பட்டது.

மத்தூர் ஒன்றியச் செயலாளர் க. சக்கரவர்த்தி அவர்கள் தலைமை தாங்கி, ஜெயலலிதா அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினர். பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கி பிறந்தநாள் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

கலந்துகொண்ட முக்கிய நிர்வாகிகள்: இந்த விழாவில் ஏராளமான கட்சிப் பொறுப்பாளர்கள் மற்றும் நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர் அவைத்தலைவர் செல்ல கிருஷ்ணன் ஒன்றிய துணைச் செயலாளர் இம்தியாஸ் ஷாஜகான் மாவட்ட பிரதிநிதிகள் அக்ரி கிருஷ்ணமூர்த்தி, பூங்கொடி ஆறுமுகம் மாவட்ட சார்பு அமைப்பு பொறுப்பாளர்கள் விநாயக மூர்த்தி, எம்.ஆர். முனுசாமி முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் மனோகரன் சிவம்பட்டி ஒன்றிய இளைஞர் பாசறை செயலாளர் பாண்டியன் எம்.ஜி.ஆர் மன்றம் முருகன். ஒன்றிய மாணவர் அணி இணைச் செயலாளர் மாதையன் புவனேஸ்வரி மேலும், கோடிபதி மணி, நாகம்பட்டி முன்னாள் தலைவர் நடராஜன், ஒன்றிய இளைஞரணி செயலாளர் துரைராஜ், மாணவர் அணி ஒன்றிய செயலாளர் சக்தி, ஓட்டுநர் அணி செயலாளர் தண்டபாணி, கலர்பதி பூபதி, பிரகாசன், ம.இ. பகதூர், குமார், கணேசன், நடுப்பட்டி செந்தில், கனகானூர் தர்மலிங்கம் உள்ளிட்ட திரளான கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழக நிரந்தர பொதுச் செயலாளர் புரட்சித்தலைவர் MGR அவர்களின் ஆசியுடன் புரட்சி தலைவி அம்மா அவர்களின் 78 ஆம் ஆண்டு பிறந்தநாள் விழா விழுப்புரம் மாவட்ட கழக செயலாளர் செஞ்சி சேவல் வெ.ஏழுமலை B.Com,BL, Ex:MLA, Ex:MP அவர்கள் மற்றும் கழக மருத்துவ அணி இணை செயலாளர் டாக்டர் ணி.யோகேஸ்வரன் MBBS, MS, ortho அவர்கள் அன்னமங்கலம் பிஙிபெட்ரோல் பங்க் அருகில் புரட்சித்தலைவி *அம்மா * அவர்களின் திருஉருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி இனிப்பு வழங்கி சிறப்பித்தனர்... உடன் மாவட்ட கழக தகவல் தொழில் செயலாளர் K.நவாப் (எ) நவீன்குமார் மேல்மலையனூர் ஒன்றிய எம்ஜிஆர் இளைஞர் அணி செயலாளர் N.சிவராஜ் ஒன்றிய இளைஞரணி வளத்தி பழனி மேல்மலையனூர் ஒன்றிய கழக செயலாளர் ராஜேந்திரன் அன்னமங்கலம் கருணாநிதி கருணாகரன் விஜியகுமார் திடில்ஏழுமலை மற்றும் கழக நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்...

# திருவள்ளூர் அருகே போலி ஆவணம் மூலம் பட்டா பெயர் மாற்றம் செய்ததால் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாக கூறி மாவட்ட ஆட்சியரிடம் மூதாட்டி கண்ணீர் மல்க புகார்

திருவள்ளூர் பிப் 25 :

திருவள்ளூர் அடுத்த சீத்தஞ்சேரி கிராமத்தை சேர்ந்தவர் சேஷம்மாள். (65) மூதாட்டியான இவரது மாமியார் ஓபுலம்மாள் என்பவர் தனது பெயரில் 1956 இல் 35 சென்ட் நிலம் வாங்கி உள்ளார். இந்நிலையில் 1976 இல் மாமியார் இறந்ததால் கணவர் குப்பு ரெட்டி பராமரித்து வந்த நிலையில் 2013இல் அவரும் உயிரிழந்துள்ளார்.



இந்நிலையில் இவரது மூத்த மகன் ஜனார்த்தனன் கட்டிய வீட்டில் தேசம்மாள் மற்றும் பேரன் பேத்திகளுடன் மூதாட்டி சேஷம்மாள் வாழ்ந்து வந்துள்ளார். இதனிடையே மாமனார், மாமியார் வழியில் வந்த உறவினர் நாகிரெட்டி என்பவரின் வாழ்வாதாரத்திற்காக இரண்டு சென்ட் நிலத்தை ஓபுலம்மாள் தந்ததில் கூரை வீடு கட்டி வாழ்ந்து வந்துள்ளார். ஆனால் நாகி ரெட்டியும் 2015இல் காலமானார்.

இந்நிலையில் நாகி ரெட்டியின் மகன்கள் மகேஷ் மற்றும் சுனில் ஆகியோர் விஏஓ உதவியுடன் ஓபுலம்மாள் பெயரில் உள்ள வீட்டு மனையை உயிரிழந்தவர் பெயருக்கு போலியான ஆவணம் பெற்றுள்ளதாக கூறப்படுகிறது. இதனையடுத்து இரண்டு சென்ட் நிலத்தை நாகிரெட்டியின் மகன் மகேஷ் என்பவர் பெயரிலும், மீதமுள்ள மூத்த மகன் கட்டியுள்ள வீடு மற்றும் நிலம் என 35 சென்ட் நிலத்தை இரண்டாவது மகன் சுனில் பெயரில் போலி ஆவணம் மூலம் பட்டா பெற்றதாக கூறப்படுகிறது.

வீட்டை அபகரிக்கும் நோக்கத்தோடு அதிகாரிகள் துணையோடு போலியான ஆவணங்கள் மூலம் பெற்ற பட்டாவை ரத்து செய்து மூதாட்டியான தானும் தனது மூத்த மகன் இறந்த நிலையில் அவர்களது பிள்ளைகளை வளர்த்து வரும் எனக்கு மீண்டும் பட்டா பெயர் மாற்றம் செய்து தருமாறு திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மூதாட்டி சேஷம்மாள் புகார் கொடுத்தார். அதேபோல் மாவட்ட எஸ்பி அலுவலகத்திலும் புகார் கொடுத்த மூதாட்டி, மூத்த குடி மக்களுக்கான சட்டத்தில் தனக்கு மீண்டும் பட்டா பெயர் மாற்றம் செய்து தர வேண்டும் என கண்ணீர் மல்க கோரிக்கை விடுத்தார்.

# புரட்சித்தலைவி அம்மா அவர்களின் 78வது பிறந்த நாளை முன்னிட்டு புதுச்சேரி மாநில அதிமுக சார்பில் மாநில கழக செயலாளர் அன்பழகன் அவர்கள் தலைமையில் அனுசரிக்கப்பட்டது



புதுச்சேரி, பிப்.25–

அதிமுக பொதுசெயலாளர், தமிழ்நாடு எதிர்கட்சித் தலைவர், முன்னாள் முதலமைச்சர், புரட்சித்தமிழர் மாண்புமிகு எடப்பாடியார் அவர்களின் ஆணைக்கிணங்க, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் 78வது பிறந்த நாளை முன்னிட்டு புதுச்சேரி மாநில அதிமுக சார்பில் மாநில கழக செயலாளர் அன்பழகன் அவர்கள் தலைமையில் அம்மா அவர்களின் பிறந்தநாள் விழா சிறப்பாக நடைபெற்றது. மாநில கழக அவைத்தலைவர் அன்பானந்தம் முன்னிலை வகித்தார். புதுச்சேரி உப்பளம் டாக்டர் அம்பேத்கர் சாலையில் உள்ள தலைமைக் கழகத்தில் கழக கொடி ஏற்றி, பட்டாசு வெடித்து, அலங்கரிக்கப்பட்ட புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருவுருவ படத்திற்கும், புரட்சித் தலைவர் திருவுருவ சிலைக்கும் மாலையணிவித்து, மரியாதை செலுத்தி இனிப்புகள் வழங்கபட்டன. மேலும் நகராட்சி அலுவலகத்தில் அரசு சார்பில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அம்மா அவர்களின் திருவுருவப்படத்திற்கும் மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

அதனை தொடர்ந்து குழந்தைகளுக்கு தங்க மோதிரம், கல்வி உதவித்தொகை, வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் ஏழை, எளிய மக்களுக்கு, இலவச வேட்டி, சேலை, மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டது.

இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பிறந்த நாள் விழாவில் மாநில செயலாளர் அன்பழகன் அவர்கள் ஏழை எளிய மக்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசியதாவது:

திமுக என்ற தீய சக்தியை அரசியல் அரங்கத்தில் இருந்து அப்புறப்படுத்த புரட்சித் தலைவரால் உருவாக்கப்பட்ட மாபெரும் இயக்கம் அதிமுக. புரட்சித்தலைவரின் மறைவிற்கு பிறகு அதிமுக என்ற மாபெரும் கட்சியை அகில இந்திய அளவில் தவிர்க்க முடியாத சக்தியாக கட்டிக்காத்தவர் நம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். பன்முக திறமை, சிறந்த மதிநுட்பம், சிறந்த ஆளுமை, தேசபற்று, சமுக நீதியில் அக்கறைகொண்டவர் நம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆவார்.

தன் உயிர் மூச்சு உள்ளவரை ஏழை எளிய ஒட்டுமொத்த தமிழ் சமுதாய மக்களின் நலனுக்காக பாடுபாட்டவர் நம் புரட்சித்தலைவி அம்மா ஆவார். நம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மறைந்தும் மறையாமல் விண்வெளியில் உள்ள துருவ நட்சித்திரமாக நம் அனைவரின் மனதிலும் சிறந்த வழிகாட்டியாக உள்ளார்.

புரட்சித்தலைவி அம்மா அவர்களின் 78வது பிறந்தநாளை மாண்புமிகு அம்மா அவர்களின் எண்ணப்படி ஏழை எளியோர்களுக்கு உதவிடும் நாளாக நாம் கொண்டாடுகிறோம். ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் மக்களுக்கு துணைநின்று உதவிடும் ஒரே இயக்கம் அதிமுக மட்டுமே.

நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்குலைவு, பிரிவினைவாதம், எல்லை தாண்டிய பயங்கர வாதம், ஜாதி மத மோதல்கள், சமூக சமுதாய பாதிப்புகள் உள்ளிட்ட மக்கள் விரோத செயல்கள் ஏற்படும் போது மக்கள் மனதில் ஒன்றே ஒன்று தான் ஏற்படும். அது புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உயிரோடு இருந்திருந்தால் இதுபோன்ற செயல்கள் நடைபெற்று இருக்குமா என்ற ஏக்கம் தான் அனைவரின் மனதிலும் ஏற்படும்.

புரட்சித்தலைவி அம்மா அவர்களின் மறைவிற்கு பிறகு அதிமுகவை கழக பொதுச்செயலாளர் மாண்புமிகு எடப்பாடியார் அவர்கள் கண் இமை போல் கட்டிக்காத்து வருகிறார். தமிழகத்தில் ஆட்சி நடத்தும் விடியா திமுக அரசின் செயல்படாத தன்மை, சட்டவிரோத செயல்கள், போதை பொருட்கள் விற்பனை, ஊழல், லஞ்சம், பெண்களுக்கு பாதுகாப்பு இன்மை உள்ளிட்ட அன்றாட மக்கள் விரோத நிகழ்வுகளை எடுத்துக்கூறி திமுகவின் தீய முகத்திரையை தினசரி கிழித்து வருகிறார் நம் பொதுச்செயலாளர் அவர்கள்.

புதுச்சேரியில் 5 ஆண்டுகால தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி சிறப்பாக ஆட்சியை வழங்கி வருகிறது. அறிவித்த அனைத்து திட்ட பயன்களும் மக்களை உடனுக்குடன் சென்றடைகின்றன. கடந்த திமுக காங்கிரஸ் ஆட்சியின் போது இருண்ட ஆட்சியை கொடுத்த திமுக காங்கிரஸ் ஆகிய இவ்விரண்டு கட்சிகளும் பொய் பரப்புரையை மேற்கொண்டு வருகின்றன. முன்னாள் முதலமைச்சர் நாராயணசாமி வாயை திறந்தாலே பொய்யை தவிர வேறு எதுவும் வருவதில்லை. இன்னொரு கட்சியான திமுக வாய்மூடி மவுனம் காத்து தங்களது தொழில்வளத்தை பெருக்கிக்கொண்டு வருகிறது.

நடைபெற இருக்கும் தேர்தல் தோல்வி பயத்தால் திமுகவும் காங்கிரசும் அராஜகத்தை கட்டவிழ்த்து வருகிறார்கள். முன்னாள் முதல்வரும் காங்கிரஸ் கட்சி தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திரு.வைத்திலிங்கம் அவர்கள் கட்சி அலுவலகத்தில் பேசும் போது எல்லாரும் உருட்டு கட்டைகளையும் ஆயுதுங்களையும் கொண்டு எதிரியை தாக்க தயாராக இருங்கல் என பேசுகிறார். ஒரு பெரிய மனிதர் இப்படியெல்லாம் பேசி மாநிலத்தில் சட்டம் ஒழுங்கை சீர்கெடுக்க பார்க்கிறார்.

வரும் சட்டமன்ற தேர்தலில் தமிழகத்தில் மக்கள் விரோத விடியா திமுக அரசை வீட்டிற்கு அனுப்பி மக்களுக்காக பாடுபடும் எடப்படியார் தலைமையில் அதிமுக ஆட்சியை கொண்டுவர மக்கள் முடிவு செய்துள்ளனர். புதுச்சேரியிலும் மீண்டும் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி மலரும். நடைபெறும் சட்டமன்ற தேர்தலில் அதிமுக அங்கம் வகிக்கும் நல்லாட்சி மலர நாம் அனைவரும் சபதம் ஏற்போம்.

இவ்வாறு அவர் பேசினார்.

இக்கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், மாநிலத் துணைத் தலைவர் ஆர். ராஜாராமன், மாநில மகளிர் அணி இணைச் செயலாளர் முன்னாள் எம்எல்ஏ கோமளா, மாநில கழக இணைச் செயலாளர்கள் வீரம்மாள், முன்னாள் கவுன்சிலர்கள் மகாதேவி, கணேசன். ஆர்.வி.திருநாவுக்கரசு, மாநில கழகப் பொருளாளர் ரவிபாண்டுரங்கன், புதுச்சேரி நகரக் கழக செயலாளர் அன்பழகன் உடையார், மாநில துணைச் செயலாளர்கள் எம். உமா என்ற கோவிந்தம்மாள் பி. எல்.கணேசன், எம்.ஏ.கே. கருணாநிதி,,எம். நாகமணி, எஸ்.கிருஷ்ணமூர்த்தி ஏ.,காந்தி, பி. குமுதன் ஆர். மணவாளன்.,உழவர்கரை நகர செயலாளர் எஸ்.எஸ். சித்தானந்தம்,மாநில எம் ஜி ஆர் மன்ற செயலாளர் பார்த்தசாரதி, மாநில அண்ணா தொழிற்சங்க பேரவை செயலாளர் ஏ. பாப்புசாமி, மாநில மகளிர் அணி செயலாளர் விமலா ஶ்ரீ,மாநில இளைஞர் மற்றும் இளம்பெண்கள் பாசறை செயலாளர் தமிழ்வேந்தன், முன்னாள் மாநில எம்ஜிஆர் மன்ற செயலாளர் சிவாலய இளங்கோவன்,மாநில மீனவர் அணி செயலாளர் ஞானவேல், மாநில இலக்கியணி செயலாளர் கே.எம்.ராமசாமி,மாநில அமைப்புசாரா ஓட்டுனர் அணி செயலாளர் டி. செல்வம்,மாநில வழக்கறிஞர் பிரிவு செயலாளர் கே. சுதர்சன்,மாநில கலைப் பிரிவு செயலாளர் செந்தில்குமார் பொதுக்குழு உறுப்பினர்கள் பாலன், வெங்கடேசன், சிவராமராஜா, நாக. லோக நாதன், ஜானிபாய்,ராஜராஜன், கல்பனா, ஜெயந்தி, தொகுதி கழக செயலாளர்கள் எம்.பி.பாஸ்கர்,ஜி கருணாநிதி. கே.சம்பத், எஸ்.ராஜா, எம். கமல்தாஸ், ஞிக்ஷீ.எஸ். கணேஷ் கே.,இரிசப்பன், வீ. பிரதீப்குமார், ஆர். எம்.நடேசன், பி. கிருஷ்ணன், கே.வேலவன், வி., எம்.முகமது யூசுப் வி. கோபால், இளங்கோ, சீனிவாசன், மாநில எம்ஜிஆர் மன்ற தலைவர் பாண்டுரங்கன், மாநில எம் ஜி ஆர் மன்ற, இணைச் செயலாளர்கள் கணேசன், அன்பழகன்,இருதயராஜ், துணைத்தலைவர்கள் பால்ராஜ், சத்தியமூர்த்தி,மாநில மகளிர் அணி தலைவர் தரணிதேவி, மாநிலத் துணைச் செயலாளர் மகேஸ்வரி,மாநில மகளிர் அணி பொருளாளர் செந்திலரிசி,மாநில அம்மா பேரவை இணைச்செயலாளர் ராமச்சந்திரன், மாநில அண்ணா தொழிற்சங்க பேரவை துணை செயலாளர் ராசு (எ) வரதன்,மாநில வர்த்தக அணி தலைவர் குணா,மாநில சிறுபான்மை பிரிவு இணைச் செயலாளர்கள் மோகன்தாஸ், ரபீக்,மாநில வழக்கறிஞர் பிரிவு இணைச் செயலாளர் சையது அகமது, மொய்தீன்,முன்னாள் தொகுதி செயலாளர் தமிழ்ச்செல்வன், தொகுதி கழக தலைவர்கள் சவரிநாதன், மூர்த்தி, ராஜேந்திரன், ஆறுமுகம், கருணாநிதி, கண்ணன், சங்கர், சுரேஷ்குமார்,, சிவகுமார், ரவி , இலியாஸ் என்ற பஜீலுதீன், சிவா,கிருஷ்ணன் உட்பட கழகத்தினர் பலர் திரளாக கலந்து கொண்டனர்.

# திருச்சி எக்ஸ்பிரஸ் ரயிலில் கழிவறையில் பிணமாக தூக்கில் தொங்கிய பயணி

## உடலை கைப்பற்றி ரயில்வே போலீசார் விசாரணை:

திருச்சி, பிப். 25

திருச்சிக்கு வந்த சோழன் விரைவு ரயிலில் அடையாளம் தெரியாத ஆண் ஒருவர் தூக்கிலிட்ட நிலையில் இறந்து கிடந்தது குறித்து ரயில்வே போலீஸார் விசாரித்து வருகின்றனர்.



சென்னையிலிருந்து திருச்சிக்கு நேற்று (திங்கட்கிழமை)மாலை 4 மணிக்கு வந்த சோழன் அதிவிரைவு ரயிலின் முன்பக்க முன்பதிவற்ற பொதுப்பெட்டியில் உள்ள கழிவறையில் ஆண் ஒருவர் தூக்கிலிட்ட நிலையில் இறந்து கிடப்பதாக, ரயில் பயணி கள் திருச்சி ரயில்வே போலீஸாருக்குத் தகவல் அளித்தனர். அதன்பேரில், அங்குசென்ற போலீஸார், இறந்து கிடந்தவரை மீட்டு

உடற்கூறாய்வுக்காக திருச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இறந்து கிடந்தவருக்கு சுமார் 50 வயது இருக்கலாம். தனக்குத்தானே தூக்கிட்டு இறந்துள்ளார். இறந்தவரின் சட்டைப் பையில் சிங்கபெ ருமாள் கிளாம்பாக்கம் வந் ததற்கான பேருந்து பயண டிக்கெட் வைத்துள்ளார். நீலம், சிவப்பு, வெள்ளை கட்டம் போட்ட மேல் சட்டையும், காப்பி நிற கால் சட்டையும் அணிந்திருந்தார். இறந்தவர் யார், எந்த ஊரைச் சேர்ந்தவர்? என்ற விவரம் தெரியவில்லை. இது குறித்து திருச்சிரயில்வே போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்து வருகின்ற னர்.

# கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் உத்தனப்பள்ளியில் பரபரப்பு: சாலையோரம் வீசப்பட்ட ஆயுதங்கள்: போலீஸ் விசாரணை

கிருஷ்ணகிரி, பிப்.25–

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் அருகே உள்ள உத்தனப்பள்ளி பகுதியில், சாலையோரம் மர்ம நபர்கள் பயங்கர ஆயுதங்களை வீசிச் சென்ற சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. உத்தனப்பள்ளி அருகே உள்ள பிரதான சாலையோரம் நேற்று காலை பொதுமக்கள் நடமாடிக்கொண்டிருந்த போது, புதருக்கு அருகே கட்டை பையில் ஏதோ கிடப்பதைக் கண்டு சந்தேகமடைந்தனர். அருகில் சென்று பார்த்தபோது, அதில் நீண்ட கத்திகள், வீச்சருவாள்கள் மற்றும் சில கூர்மையான ஆயுதங்கள் இருந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்தனர்.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த போலீசார், அங்கிருந்த ஆயுதங்களை பறிமுதல் செய்தனர். யாரேனும் பெரிய குற்றச் செயல்களில் ஈடுபட திட்டமிட்டு, போலீ சாரின் ரோந்துப் பணிக்கு பயந்து இவற்றை வீசிச் சென்றார்களா?

அல்லது அண்மையில் இப்பகுதியில் நடைபெற்று வரும் தீவிர வாகன சோதனையில் சிக்காமல் இருக்க மர்ம நபர்கள் இவற்றை எறிந்தார்களா?

என்ற கோணத்தில் போலீசார் தீவிரமாக விசாரித்து வருகின்றனர்.



அண்மைய காலங்களில் கிருஷ்ணகிரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் நாட்டுத் துப்பாக்கிகள் மற்றும் கத்திகள் பறிமுதல் செய்யப்பட்டு வரும் நிலையில், தற்போது மக்கள் நடமாட்டம் மிகுந்த சாலையோரம் ஆயுதங்கள் கண்டெடு க்கப்பட்டது கிராம மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. அப்பகுதியில் உள்ள சிசிடிவி (சிசிஜிக்ஷி) காட்சிகளை ஆய்வு செய்து, மர்ம நபர்களை போலீசார் வலைவீசி தேடி வருகின்றனர்.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421